# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.10.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்)*
## *(திருத்தம்)*

***2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது, 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்பாக காணியினை கொள்ளல் செய்துள்ள இயைபான கம்பெனிகளுக்கு அப்பிரிவின்* (i) *ஆம் பந்தியின்கீழ் காணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கென அளிக்கப்பட்ட விலக்களிப்பின் ஏற்புடைமையை நீடிப்பதற்காகும்.*

## காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்)

ச.வ. - ஒ. 34/2019

### 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

***1***. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***2***. இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் (ஐ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> "(ஐ) கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவொரு கம்பெனிக்கு எந்தக் காணியின் உரித்து கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

***3***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.